# පේෂ කර්මාන්ත දෙපාර්තමේන්තුව
# புடவைக் கைத்தொழில் திணைக்களம்
# DEPARTMENT OF TEXTILE INDUSTRY







# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT

# 2016

කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
MINISTRY OF INDUSTRY AND COMMERCE

# புடவைக் கைத்தொழில் திணைக்களம்

## 01 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சட்டத்திற்கு செய்யப்பட்ட 13ம் திருத்தத்திற்கு அமைய கைத்தறி நெசவுத் தொழில் தொடர்பான விடயம் மாகாண சபையின் கீழ் உள்ள விடயமாகும். அதன் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருப்பது அவ் விடயத்திற்குரிய கொள்கை ரீதியான தீர்மானங்களும் மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மாகாண சபை நெசவுக்கைத்தொழில் பிரிவுடன் இணைந்து செயலாற்றுவதனூடாக தொழிலின் முன்னேற்றத்திற்குரிய சேவைகளை வழங்குதல்.

### 1.1 நோக்கம்

உள்நாட்டு தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை செயற்பாடுகளினை வெற்றிபெறக்கூடிய வகையில் கைத்தறி நெசவுக்கைத்தொழில் துறையில் ஆக்கபூர்வமான போட்டியடிப்படையில் முதல்தர துணி உற்பத்திக்காக உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.

### 1.2 குறிக்கோள்

அரச கொள்கை எல்லைக்குட்பட்ட கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்காக குறித்த கொள்கையினை தயாரித்தல். அக்கொள்கையினை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் தேவையான சேவை மற்றும் வசதிகளை வழங்கலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் இணைந்து செயலாற்றுவதனூடாக கைத்தறிநெசவுத்தொழில் துறையில் அளவிலும் தரத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

## 1.3 இலக்கு

- கைத்தறி நெசவுக்கைத்தொழில் அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கையினை தயார் செய்தல்.
- உற்பத்தி அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட வேலைத்திட்டத்தினை வழங்குதல்.
    - சிறுமுயற்சியாளர் அபிவிருத்தி செயற்றிட்டம்
    - அலங்கார வேலைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
    - பயிற்சிவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம்
- கைத்தறி நெசவுக்கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசகர்கள் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.
- துறைக்குத் தேவையான உழைப்பாளர்களை பயிற்றுவித்தல்.
- விநியோக வளர்ச்சி (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விநியோக நடவடிக்கைகளை ஒருங்கமைத்தல்)
- கைத்தறி நெசவுத்தொழிலை விரிவுபடுத்துதலை நோக்காகக் கொண்ட பொருத்தமான வேலைத்திட்டம், சுயதொழில் மற்றும் மேலதிக சேவை வழங்கல் வேலைத்திட்டங்களை ஒருங்கமைத்தல்.
- கைத்தறி நெசவுக்கைத்தொழிலில் அலங்கார அபிவிருத்தி மற்றும் பண்புசார் விருத்தியை நோக்காகக் கொண்ட கண்காட்சி மற்றும் போட்டிகள் நடாத்தப்படுதல்.
- தேசிய கைத்தறி நெசவுக்கைத்தொழில் கண்காட்சி நடாத்துதல்.
- கைத்தறி நெசவுத்கைத்தொழில் விருத்திக்குத் தேவையான ஆராய்ச்சி பரிசோதனை செய்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
- புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள்.

குறித்த இலக்கை அடைவதற்காக கீழ் குறிப்பிடப்படும் நிறவனம் இத் திணைக்களத்தின் கீழ் தற்போது செயற்படுகின்றது.

**i) ஆராய்ச்சி பயிற்சி வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையம், கட்டுபெத்த ( நெசவுக்கைத்தொழில் நூதனசாலை, ஆய்வுகூடம் உட்பட)**

**280/1 காலி வீதி கட்டுபெத்த மொரட்டுவ**





**ii) இயற்கை நிறங்கள் செயற்திட்டம், ராஜகிரிய**

### iii) நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலைகள்

புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் 13 பயிற்சி பாடசாலைகளும் 02 அலங்கார பயிற்சி பாடசாலைகளும் காணப்படும்

| இல | நிறுவனம் | முகவரி |
|---|---|---|
| 01 | நெசவு பயிற்சி பாடசாலை கட்டுபெத்த | 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ |
| 02 | நெசவு பயிற்சி பாடசாலை கொட்டல | கொட்டல, வேயன்கொட |
| 03 | நெசவு பயிற்சி பாடசாலை போயகனை | போயகனை, குருணாகல் |
| 04 | நெசவு பயிற்சி பாடசாலை பின்னவல | பின்னவல, றம்புக்கன |
| 05 | நெசவு பயிற்சி பாடசாலை வட்டபுழுவ | அருப்பல வீத? வட்டபுழுவ, கண்டி |
| 06 | நெசவு பயிற்சி பாடசாலை கட்டமபே | கட்டம்பே, பேராதனை |
| 07 | நெசவு பயிற்சி பாடசாலை மாத்தளை | கோன்ககமுல, பலாபத்வல, மாத்தளை |
| 08 | நெசவு பயிற்சி பாடசாலை மாத்தறை | ஹக்மன வீதி, மாத்தறை |
| 09 | நெசவு பயிற்சி பாடசாலை கிரம | கிரம |
| 10 | நெசவு பயிற்சி பாடசாலை பண்டாரவெலை | கீணிகம, பண்டாரவெலை |
| 11 | நெசவு பயிற்சி பாடசாலை தலாவ | மிஹிரிகம, தலாவ |
| 12 | நெசவு பயிற்சி பாடசாலை நல்லுர் | 194, பருத்தித்துறை வீதி, நல்லுர், யாழ்ப்பாணம் |
| 13 | நெசவு பயிற்சி பாடசாலை சம்மாந்துறை | சம்மாந்துறை |
| 14 | வடிவமைப்பு பயிற்சி பாடசாலை கட்டுபெத்த | 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ |
| 15 | வடிவமைப்பு பயிற்சி பாடசாலை கட்டம்பே | கெட்டம்பே, பேராதனை |











2016/12/31ம் திகதிக்கு திணைக்களத்தின் ஊழியர் சபை

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஊழியர் சபை | தற்போதைய ஊழியர் சபை | பற்றாக்குறை |
|---|---|---|---|
| பணிப்பாளர் | 01 | 01(சே.பா) | 01 |
| பிரதி பணிப்பாளர்/ உதவி பணிபடபாளர் | 02 | 01 | 01 |
| கணக்காளர் | 01 | 01 | 0 |
| நெசவுக் கைத்தொழில்நுட்ப விஞ்ஞானி | 01 | 01 | 0 |
| தொழில் அதிகாரி | 01 | 0 | 01 |
| தொழிநுட்பவியலாலர் | 01 | 01 | 0 |
| அபிவிருத்தி உதவியாளர் / அபிவிருத்தி நிறுவாகி | 08 | 08 | 0 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 | 11 | 09 |
| நெசவு ஆலோசகர் | 61 | 51 | 10 |
| நிறைவுறு உதவியாளர் | 01 | 01 | 0* |
| சித்திர செய்முறையாளர் | 18 | 11 | 0* |
| சாரதி | 05 | 05 | 0 |
| அலுவலக உதவி சேவையாளர | 10 | 04 | 06 |
| காவற்காரர் | 18 | 17 | 01 |
| தொழிலாளர் | 09 | 08 | 01 |
| மொத்தம் | 157 | 120 | - |

**புதிதாக இணைத்துக்கொள்ளல் மற்றும் ஓய்வு பெறல்**

2016ம் ஆண்டில் 08 காவலாளர்களினை இணைத்துக் கொள்ளப்பட்டது.

2016 ஆம் வருடத்தில் கீழ் குறிப்பிடப்படும் வகையில் அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

முகாமைத்துவ உதவியாளர் ~ 02

நெசவு ஆலோசகர் ~ 04

சித்திர செய்முறையாளர் ~ 01

## 02. 2016 வருடத்தின் நிதி சம்பந்தமான வளர்ச்சி

### 2.1 ஒதுக்கீட்டின் உபயோகம்

2016 வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு கீழ் குறிப்பிடப்படும் வகையில் சதவீதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

முழு தேறிய மீண்டெழும் ஒதுக்கீட்டின் சதவீதமாக முழுப் பாவனை 92 %

முழு தேறிய மூலதன ஒதுக்கீட்டின் நூற்றுவீதத்தின் முழுப்பாவனை 100 %

| செலவு விடயம் | | முழு தேறிய ஒதுக்கீடு (2016 வருடம்) (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | தேறிய விளைவு மிகுதி/அதிகரிப்பு (ரூபா) | செலவு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் செலவுகள் | | | | |
| 1001 | தனிநபர் சம்பளங்கள் | 29,500,000 | 27,705,515.96 | 1,794,484.04 | 94% |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளம் | 840,000 | 838,869.37 | 1,130.63 | 100% |
| 1003 | ஏனைய கொடுப்பனவு | 31,500,000 | 28,157,249.44 | 3,342,750.56 | 89% |
| | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 10,960,000 | 10,583,401.37 | 376,598.63 | 96.5% |
| | | | | | |
| | மூலதன செலவுகள் | | | | |
| 2001 | கட்டிடமும் நிர்மாணமும் | 6,800,000 | 6,799,742.93 | 257.07 | 100% |
| 2003 | வாகனம் | 650,000 | 650,000 | - | 100% |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 2,900,000 | 2,900,000 | - | 100% |
| 2401 | பயிற்சியளித்தலும் திறன் விருத்தியும் | 22,800,000 | 22,667,645.24 | 132,354.76 | 99% |

## 2.2 வருமானக் கணக்கு

நெசவுத் கைத்தொழில் திணைக்களம் சேவை வழங்கும் நிறுவனமொன்று என்பதனால் விசேட வருமானம் இல்லை.

## 2.3 அரச அதிகாரிகளின் முற்பண பீ கணக்கின் செயற்பாடு

| | உச்ச வரவு எல்லை ரூபா | குறைந்த கிடைக்கும் எல்லை ரூபா | உச்ச வரவு மீதி எல்லை ரூபா |
|---|---|---|---|
| வருடாந்த பகிர்வுக் கணக்கின் எல்லை அமைச்சரவையின் திருத்த எல்லை(303011) | 5,500,000 | 3,000,000 | 25,000,000 |
| வருடாந்த உண்மைச் செலவுகள் | | | |
| 303011 | 5,473,698.09 | 3,380,507.09 | 13,378,580.00 |
| 303012 | 1,259,061.09 | 1,769,285.09 | |

## 3. வருடாந்த செயற்பாடுகள்

### 3.1 கட்டடங்களினை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பிக்கும் நடவடிக்கை

- மாத்தளை பண்டாரவெல மலாவ போயகனே வட்டபுழுவ கொட்டல கட்டம்பே கட்டுபெத்த நெசவு பாடசாலைகளின் கட்டிடங்களினை புதுப்பித்தல்.
- அநுராதபுர செயற்திட்டத்தின் முன்னேற்ற முன்னேற்ற நடவடிக்கைகள்.
- புடவை கைத்தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தினை புதுப்பித்தல் நடவடிக்கை.

### 3.2 வலுவூட்டும் பிரிவு தொடர்பான நடவடிக்கைகள்

திணைக்களத்திலிருந்து தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ள வலுவூட்டும் நிறுவனம் தொடர்பான நடவடிக்கை மற்றும் அந் நிறுவனங்களில் இருந்து தொழில் இழந்த ஒய்வூதியம் மற்றும் இழப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் அதிகாரிகள் தொடர்பான நடவடிக்கைகள் இப் பிரிவினூடாக செயற்படுத்தப்படும்.

1980/81/82 ஆண்டுகளில் தனியார் மயப்படுத்தப்பட்ட நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய வலுவூட்டும் வியாபார நிறுவனங்களில் சேவை செய்த 10 வருடத்திற்கு குறைந்த ஊழியர்களிற்கான இழப்பீட்டுத் தொகையொன்று வழங்குவதற்காக இல 12/0865515/004-1 மற்றும் 2012-07-12ம் திகதிய அமைச்சுத் தீர்மானத்திற்கேற்ப குறித்த இழப்பீட்டினை வழங்கியுள்ளது.

2016.12.31 ஆம் திகதியாகும் போது இழப்பீடு வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 3910 மற்றும் 355 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

### 3.3 நெசவுக் கைத்தொழில் பயிற்சி செயற்திட்டம்

- நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்து பயிற்சியளித்தல்

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்ற நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலை 13 ஊடாக நெசவுத்தொழில் தொடர்பான ஆறு மாதகால அடிப்படைப் பயிற்சிப் பாடநெறி மற்றும் 13 மாதகால இறுதிச் சான்றிதழ் பாடநெறியினூடாக குறித்த பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல்.

அதன் பிரகாரம் 2015/2016 கல்வியாண்டில் 2015.07.02 முதல் 2016.07.31 வரை பாடநெறியினை தொடர்வதற்கு 161 மாணவர்கள் சேரத்துக்கொள்ளப்பட்டதோடு 2016/2017வருடத்திற்காக (2016.07.04 முதல் 2017.07.31 வரை) 2016 ஜுலை மாதம் இணைத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 157 ஆகும்.

* நெசவுக்கைத்தொழில் வடிவமைப்பு பாடசாலைகளுக்கு மாணவர்கள் இணைத்து பயிற்சி வழங்கல

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அலங்கார பயிற்சி பாடசாலைகள் இரண்டாகும். 2016 கல்வியாண்டிற்காக 2016 ஜனவரி மாதம் கட்டம்பே அலங்கார பயிற்சி பாடசாலைக்கு 10 மாணவர்களும் கட்டுபெத்த அலங்கார பயிற்சி பாடசாலைக்கு 10 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டது. திணைக்களத்தின் நெசவு கைத்தொழில் இறுதி சான்றிதல் பரீட்சையில் சித்தி பெற்றவர்களினை அலங்கார பயிற்சி பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்படும்.

4 * கைத்தறி நெசவுதொழில் விற்பனைக் கூடம்

உள்நாட்டு கைத்தறி நெசவுத்தொழில் உற்பத்தியாளர்களிற்காக விற்பனை சந்தர்பங்களை பெற்றுக்கொடுத்து மக்களிடையே கைத்தறி பிடவையினைப் பிரபலப்படுத்துதலும் அதற்காக அதிக கேள்வியினை ஏற்படுத்துதலும் நோக்காகக் கொண்டு 2016 மார்ச் மாதம் 25-27 திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடாத்தப்பட்டது.







* **கைத்தறி புடவை போட்டி கண்காட்சி விற்பனை கூடம் மற்றும் விருதுகள் வழங்கும் வைபவம்**

கைத்தறி நெசவுத்தொழில் தரத்தினைக் கூட்டுதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனையினை நோக்காகக் கொண்டு உள்நாட்டு உற்பத்திசெய்கின்ற கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஈடுபடுகின்றவர்களின் திறமையினை வளர்ப்பதற்கு , ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் திறமையினை பாராட்டுதலிற்காக வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தேசிய கைத்தறி புடவைக் கண்காட்சி மற்றும் சான்றிதழ் வழங்கல் 2016 டிசெம்பர் மாதம் 09 – 11 திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடாத்தப்பட்டது.


















EXIT
Department of Textile Industry






Department of Textile Industry


EXIT

## 5 சேவை பயிற்சி செயற்திட்டம்

நெசவுக் கைத்தொழில் முகாமையாளர்கள், சிறுமுயற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வரை சென்றடையும் வகையில் நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி வேலைத்திட்டம் மற்றும் கருத்தரங்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் மற்றும் தயார்படுத்துதல் இதன் கீழ் நடைபெறும்.

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் ஊழியர் சபை, மாகாண அரசு, கூட்டுறவு, தனியார் பிரிவுகளின் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் உள்ளடக்கப்படுபவர்களின் வினைத்திறனை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டு 2016 ஆம் வருடத்தில் 974 பயிற்சியாளர்களுக்கு 36 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
(புடவை கைத்தொழில் துறைக்கு ஏற்ற பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள் 26, திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்கள் 02,நெசவு பயிற்சி பாடசாலை மாணவர்களுக்கு ஆளுமை வளர்ச்சி நிகழ்ச்சிதிட்டங்கள் 3 மற்றும் 05 கல்வி சுற்றுலா)



## 6 பரீட்சை நடாத்துதல்

**நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடநெறி தொடர்பான பரீட்சை நடாத்தப்படல**

நெசவுக்கைத்தொழில் இறுதிச்சான்றிதழ் பத்திரம் மற்றும் அடிப்படை பயிற்சி பாடநெறிகளிற்குரிய குறித்த பரீட்சை நடவடிக்கைகள் 2016 ஜூலை மாதம் 26~28 ஆம் தினங்களின் நடாத்தப்பட்டது. இதற்காக நெசவுப்பாடசாலை மாணவர்கள் 127 பேர் மற்றும் வெளி விண்ணப்பதாரர்கள் 57 பேரும் பங்குபற்றியதோடு நெசவு பாடசாலை மாணவர்கள் 02 பேரும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 12 பேரும் பரீட்சைக்கு தோற்றவில்லை.

| பரீட்சை நிலையம் | நெசவு பாடசாலை மாணவர்கள் | | வெளிவாரி விண்ணப்பதாரர்கள் | |
|---|---|---|---|---|
| | வந்தவர்கள் | வராதவர்கள் | வந்தவர்கள் | வராதவர்கள் |
| கொட்டல | 12 | - | 03 | 02 |
| கட்டுபெத்த | 12 | - | 06 | 01 |
| கட்டம்பே | 13 | - | 06 | - |
| கிரம | 10 | - | 02 | - |
| போயகனே | 22 | 01 | 01 | 01 |
| மாத்தளை | 05 | - | 09 | - |
| பண்டாரவெலை | 08 | - | 09 | - |
| மாத்தரை | 06 | - | 02 | 02 |
| வட்டபுழுவ | 19 | 01 | - | - |
| பின்னவலை | 12 | - | - | - |
| சம்மாந்துரை | 05 | - | 11 | 05 |
| நல்லூர் | 03 | - | 08 | 01 |
| **மொத்தம்** | **127** | **02** | **57** | **12** |

- ஒரு வருட அலங்கார பயிற்சி பாடநெறியினை பயில்வதற்காக 2016 சனவரி மாதம் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிற்கான பாடநெறி இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சை 2017 சனவரி மாதம 25-27 ஆம் திகதிகளில் நடாத்தப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. ஆதற்காக கடம்பே அலங்கார பயிற்சி பாடசாலையின் 10 மாணவர்களும் கட்டுபெத்த அலங்கார பயிற்சி பாடசாலையில் 09 மாணவர்களும் முகம் கொடுக்கவுள்ளனர்.

<u>திணைக்கள அதிகாரிகளிற்காக நடாத்தப்படுகின்ற தடைதாண்டல் பரீட்சை</u>

திணைக்களத்தில் 31 நெசவு போதனாசிரியர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை 2016.07.02 ஆம் திகதி திணைக்களத்தின் கட்டுபெத்த பிரிவில் நடாத்தப்பட்டது.

## 07 பயிற்சி மற்றும் ஆற்றல் வளர்ச்சி

2016 ஆம் வருடம் திணைக்கள நிறுவாகிகள் தேசிய மற்றும் வெளி நாட்டு பயிற்சிகளுக்கு பங்குபற்றுதல் சம்பந்தமான விபரங்கள் பின்வருமாறு

| பயிற்சி பாடநெறி நிகழச்சி திட்டம் | புயிற்சி காலம் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்ட காலம் | தேசிய வெளிநாட்டு | பங்குபற்றிய நிறுவாகிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பொது ஆவணங்கள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான ஒ ஒரு நாள் நிகழச்சி திட்டம் | தினங்கள் 01 | தேசிய | 01 |
| தகவல் தொழில்நுட்ப பொருட்கள் கொள்முதல் மற்றும் மதிப்பீட்டு ஏலம் | தினங்கள் 01 | தேசிய | 01 |
| கொள்முதல் செயல்முறை | தினங்கள் 02 | தேசிய | 02 |
| தாபன விதிக்கோவையின் விதிகள் சம்பந்தமான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நிறுவாகிகளினை அறிவுட்டும் நிகழ்ச்சித்திட்டம் | தினங்கள் 02 | தேசிய | 02 |
| தாபன விதிக்கோவையின் விதிகள் சம்பந்தமான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நிறுவாகிகளினை அறிவுட்டும் நிகழ்ச்சித்திட்டம் | தினங்கள் 02 | தேசிய | 01 |
| தாபன விதிக்கோவையின் விதிகள் சம்பந்தமான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நிறுவாகிகளினை அறிவுட்டும் நிகழ்ச்சித்திட்டம் | தினங்கள் 02 | தேசிய | 02 |
| அரச கொள்ளல் அடிப்படை மற்றும் கொள்ளல் திட்டங்கள் | தினங்கள் 01 | தேசிய | 01 |
| ஏல (bid) நடைமுறை திட்டம் | தினங்கள் 01 | தேசிய | 01 |
| ஏல கோவைகளினை தயாரித்தல் | தினங்கள் 01 | தேசிய | 01 |
| ஏல மதிப்பீடு | தினங்கள் 01 | தேசிய | 01 |

08 மிக சிறப்பான ஜீவனோபாய முறையாக கைத்தறி புடவை கைத்தொழில் கிராமீய மட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கில் குருநாகலை மாத்தளை மற்றும் மட்டக்களப்புமாவட்டங்களில் உள்ள வாரியபொல வெல்லவ தலன்ள மற்றும் பாலமுனை பிரதேசங்களில் 41 நலன் பெறுனர்களுக்கு கைத்தறி புடவை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

09 கைத்தொழில் மற்றறும் வணிக அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் புடவை கைத்தொழில் திணைக்களம் முலம் இலங்கையின் வெவ்வேறான மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் புடவை கைத்தொழில் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஹிகுரக்கொடை, லுனுகம்வெஹர, தெஹிஅத்தகண்டி, வாழச்சேனை, வெளிகந்த, மருதமுனை மற்றும் கேகாலை மாவட்டத்தின் போபிடிய, ரம்புக்கன(உடுகம), மஹபல்லேகம மற்றும் தோலங்கமுவ போன்ற பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நலன் பெறுநர்களுக்கு கைத்தறி புடவை கைத்தொழில் சம்பந்தமான ஆறு மாத கால பயிற்சியினை வழங்கியதன் பின்னர் கைத்தொழிலினை ஆரம்பிப்பதற்கு தேவையான கைத்தறி அடிப்படை உபகரணங்கள் மற்றும் முலப் பொருள் இலவசமாக வழங்கியதன் பின்னர் பயிற்சியினை பெற்ற நலன் பெருநர்கள் கைத்தொழிலில் ஈடுபடச் செய்யப்படுவதோடு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தேசிய உற்பத்தியாலர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு தேவையான கைத்தறி உபகரணங்கள் இலவசமாக வழங்கபபட்டுள்ளது.













10 புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்கும் செயற்திட்டங்களுக்கும் தேவையான நூல் மற்றும் உபகரணங்களையும் பிரதான அலுவலகத்திற்கு தேவையான தளபாடங்கள் விலைக்கு வாங்கப்பட்டது.

11 நெசவுத் தொழில் பயிற்சி பாடசாலைகளில் நெசவுத்தொழில் பயிற்சி பாடநெறியினைத் தொடர்கின்ற மாணவர்களிற்காக நடாத்தப்படுகின்ற ஆங்கிலப் பயிற்சிப் பாடநெறி 2016 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

12 2016 கைத்தறி நெசவுக்கைத்தொழில் கண்காட்சிக்காக சமுகமளிக்கின்ற திணைக்கள அதிகாரிகளிற்காக சீருடையொன்று தயாரிக்கப்படுத்தப்பட்டது.

13 நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் 2016 வருடத்திலும் 02 சோடி சீருடை வழங்கப்பட்டது.

14 அரசு மூலம் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் 68000 சாரிகளுக்கு பௌத்த விவகார திணைக்களம் மூலம் 2016 ஆம் வருடத்திற்காக வழங்கப்பட்ட கொள்வனவினை புடவை கைத்தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்தியாளர் மூலம் வழங்கப்படும்.

| | வழங்குனர் | வழங்கப்பட்ட சாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சன்டெக்ஸ் வீவின் இண்டஸ்டீரீஸ்(தனி) சங்கம் | 7000 |
| 02 | எஸ்.எல்.ஆர் ஹோல்டிஙஸ் | 7000 |
| 03 | அயேஷா வீவின் | 7000 |
| 04 | ஹெலசலு வீவின் | 7000 |
| 05 | மரதகஹமுல நெசவு கூட்டுரவு சங்கம் | 5000 |
| 06 | டீ.திஸாநாயக்க நெசவு நிலையம் | 7000 |
| 07 | குருநாகல் நெசவு கூட்டுரவு சங்கம் | 5000 |
| 08 | நெசவு கைத்தொழில் கூட்டுரவு சங்கம் | 5000 |
| 09 | படபொல ஹேன்ட்லூம்ஸ் | 1000 |
| 10 | மேல் மடம்பெல்ல கைத்தறி நலன்புரிச் சங்கம் | 3000 |
| 11 | திரு ஈ.ஏ பிரான்க் டய்டஸ்(ஒரயன் டெக்ஸ்டய்ல்) | 2000 |
| 12 | திரு கே.எஸ் ஹசித எரங்க (சுப்ரீன் வீவின்) | 1000 |
| 13 | திருமதி டெகமா ஜோதி பலகசாமி(சுஜீ ஹேன்ட்லூம்ஸ்) | 1000 |
| 14 | களனி பெப்ரிக்(தனி)சங்கம் | 1995 |
| 15 | லங்கா சலுசல | 1000 |
| 16 | கண்டி பெப்ரிக்(தனி) சங்கம் | 500 |
| 17 | திலினி மற்றும் மதுசி உற்பத்திகள் | 2000 |
| 18 | டீ.ஜே புரடக்ஸ் | 3000 |
| 19 | கொட்டல லிய சஹன நலன்புரிச் சங்கம் | 1000 |
| 20 | ஜே.கே புரடக்ஸ் | 500 |

15 2016 வருடத்திலுல் NB-3003, PD-4265,KC-7670,51-5959 என்ற திணைக்கள வாகனங்களினை புதுப்பித்தல்

16 பயிற்சி நிறுவனங்கள் கவர்ச்சிகரமான நடாத்திச் செல்வதன் மூலம் அதிக அனவான பயிற்சியாலர்களை இணைத்துக் கொள்ளும் நோக்கில் சம்மாந்துறை, கட்டுபெத்த, பின்னவலை,பண்டாரவெல, கட்டம்பே, வட்டப்புழுவ, மாத்தளை, மாத்தறை, நெசவுபயிற்சி பாடசாலை கட்டிடங்களில் நிரம் புசுவதற்கான உபகரணங்களை விலை கொடுத்து வாங்கப்பட்டது.

## 2016 ஆம் வருடம் நடாத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்

### கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டங்கள்

கைத்தறி புடவை கைத்தொழில் கிராமிய செயற்திட்டங்கள்

| செயற்திட்டம் | நலன் பெற்றோர் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. |
|---|---|---|
| மருதமுனை | 90 | 10.000 |
| வாழைச்சேனை | 35 | 4.200 |
| தெஹிஅத்தகண்டி | 20 | 2.500 |
| வெலிகந்த | 11 | 2.500 |
| ஹிங்குறாக்கொடை | 04 | 2.500 |
| லுணுகம்வெஹெர | 20 | 2.500 |
| கேகாலை | 60 | 10.00 |
| | | |
| தெஹிஅத்தகண்டி | 08 | |
| உஹன | 17 | |
| தமன | 08 | |
| சாய்ந்தமருது | 09 | |
| அட்டாளைச்சேனை | 15 | 13.570 |
| சம்மாந்துறை | 18 | |
| ஆலையடிவேம்பு | 11 | |
| காரைதீவு | 25 | |
| அல்ஹமர் கூட்டுறவு சங்கம் | 41 | |

## புடவை கைத்தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு கைத்தறி வழங்கள்

(பெருமதி ரூ.மி.3.400)

| சங்கத்தின் பெயர் | கைத்தறி | வைன்டின் |
|---|---|---|
| இலங்கை புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை. மீரிகம புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.கொட்டாவ புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.கண்டி கலாவிய புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.துண்கோரலே புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.கேகாலை புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.குளியாப்பிட்டி புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.குருநாகல் புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.கண்டி புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை. மாத்தளை புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |
| வரை.கடவத்தை புடவை கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் | 05 | 05 |

## புடவை கைத்தொழில் திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைபடுத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டங்கள்

### கிராமிய பிரதேசங்களில் பெண்களின் வாழ்க்கை முறையினை கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டங்கள்

| செயற்திட்டம் | நலன் பெற்ற பெண்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. |
|---|---|---|
| வெல்லவ | 07 | 0.900 |
| வாரியபொல | 11 | 1.320 |
| தலல்ல | 12 | 1.440 |
| கிதுல்வல | 08 | 1.000 |
| பாலமுனை | 15 | 1.800 |